**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், வலங்கைமான்.**

2025ம் ஆண்டு ஜூலை மாதம் 21ம் நாள் திங்கட்கிழமை

**அசல் வழக்கு எண். 15/2023**

வாதி தரப்பு சாட்சியாக PW. 1 ன் வாக்குமூலம் 1969ம் ஆண்டின் 44வது சட்ட ஏற்பாடின் படி திரு. P. ஜேசுபாலன், எம்.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், வலங்கைமான் அவர்களால் ஆணையிடப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | தமிழரசன் | Father Name | : | மாரிமுத்து |
| Village | : | உத்தாணி | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | டீக்கடை வியாபாரம் |
| Religion | : | | Age | : | 60 |

வாதிகள் தரப்பில் முதல் **விசாரணை** -

நான் இவ்வழக்கில் 2ம் வாதியாவேன். இவ்வழக்கின் விபரங்கள் எனக்கு தெரியும். எனது தரப்பு முதல் விசாரணையை எழுத்து பூர்வமான பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு, எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது தான். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். கடந்த 29.08.2004ம் தேதியிட்ட எனது அத்தை கோவிந்தம்மாளின் இறப்புச்சான்றிதழ் **வா.சா.ஆ.1 ஆகவும்**, கடந்த 08.08.2022ம் தேதியிட்ட இவ்வழக்கின் 1ம் பிரிதிவாதியான வட்டாட்சியர் கொடுத்த மேலெழுத்து கடிதம் **வா.சா.ஆ.2ஆகவும்,** எனது ஆதார் அட்டையின் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு **வா.சா.ஆ.3 ஆகவும்,** கடந்த 24.07.2024 ம் தேதியிட்ட 1ம் வாதியின் இறப்புச் சான்றிதழ் உண்மை நகல் **வ.சா.ஆ.4ஆகவும்** , கடந்த 19.07.2024ம் தேதியிட்ட 1ம் வாதியின் வாரிசு சான்றிதழ் கணினி நகல் **வா.சா.ஆ.5 ஆகவும்,** 3ம் வாதியின் ஆதார் அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு **வா.சா.ஆ.6ஆகவும்,** 4ம் வாதியின் ஆதார் அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு **வா.சா.ஆ.7ஆகவும், 5ம்** வாதியின் ஆதார் அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு **வா.சா.ஆ.8**

**ஆகவும்** குறியீடு செய்யப்படுகிறது. வாதிகள் தரப்பில் உத்தரவாகும்படி பிரார்த்திக்கிறேன். (**இவ்வழக்கு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது**)

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.07.21 17:20:23 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.